**செய்திவெளியீடு** **நாள் : 01.02.2024**

**கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்திலிருந்து சென்னை மாநகர் போக்குவரத்து கழகப் பேருந்துகள் இயக்கப்படுவது குறித்தும், பயணிகளுக்கு செய்யப்பட்டு வரும் கூடுதல் வசதிகள் மற்றும் நடைபெற்று வரும் பணிகள்**

********

செங்கல்பட்டு மாவட்டம், கிளாம்பாக்கத்தில் ரூ.393.74 கோடி மதிப்பீட்டில் 88.52 ஏக்கர் பரப்பளவில் சென்னைப் பெருநகர் வளர்ச்சி குழுமத்தின் சார்பில் கட்டப்பட்டுள்ள இந்தியாவின் மிகப்பெரிய பேருந்து நிலையங்களுள் ஒன்றான **"கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்தை"** மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **அவர்கள்** 30.12.2023 அன்று திறந்து வைத்து மக்கள் பயன்பாட்டிற்கு அர்ப்பணித்தார்கள். **"கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையம்"** மிகச் சிறப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது.

**கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்திற்கும் மற்றும் நகரத்தின் மற்ற பகுதிகளுக்கும் இடையிலான இணைப்பு சேவை (Last Mile Connectivity) வழங்குவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் :-**

சென்னை மாநகர் போக்குவரத்து கழகப் பேருந்துகள் (MTC) மூலம் 498 வழக்கமான பேருந்துகள் தவிர நெரிசல் மிகுந்த நேரங்களில் 200 சிறப்புப் பேருந்துகளும் மற்றும் 4,651 நடைகள் இருவழி புறப்பாடுகளாக இயக்கப்பட்டு வருகின்றன. மேலும் கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனைய கட்டிடத்திற்கும் சென்னை மாநகர் போக்குவரத்து கழகப் பேருந்து முனையத்திற்கும் இடையே 4 மினி பேருந்துகள் கட்டணமில்லா பேருந்துகளாக இயக்கப்பட்டு வருகின்றன. மேலும் வண்டலூர் கேட் மற்றும் கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்திற்கும் (KCBT) இடையே 2 மினி பேருந்துகள் கட்டண இணைப்பு சேவை பேருந்துகளாக இயக்கப்பட்டு வருகின்றன.

மேலும் கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்திற்கும் (KCBT) கோயம்பேடு பேருந்து முனையத்திற்கும் (CMBT) 5 நிமிடத்திற்கு ஒருமுறை சென்னை மாநகர் போக்குவரத்து கழகப் பேருந்துகள் (MTC) இயக்கப்பட்டு வருகின்றன. இதை தவிர

கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்திற்கும் (KCBT) மற்றும் தாம்பரம் பேருந்து நிலையத்திற்கும் 2 நிமிடத்திற்கு ஒருமுறையும், இதில் 6 பேருந்துகள் பாயிண்ட்- டூ - பாயிண்ட் பேருந்துகளாகவும், அதே போல கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்திற்கும் (KCBT) மற்றும் கிண்டி பேருந்து நிலையத்திற்கும் இடையே 3 நிமிடத்திற்கு ஒருமுறை பேருந்து சேவைகள் இயக்கப்பட்டு வருகின்றன. மேலும், இம்முனையத்திலிருந்து சோழிங்கநல்லூர், வேளச்சேரி, திருவான்மியூர், தி.நகர், மாதவரம், அம்பத்தூர், திரு.வி.க. நகர், ரெட்ஹில்ஸ், ஆவடி மற்றும் பூந்தமல்லி, சிறுசேரி உள்ளிட்ட முக்கிய நகரங்களுக்கும் பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

மேலும் இம்முனையத்தில் முன்பணம் செலுத்தப்பட்ட ஆட்டோ (Prepaid Auto) சேவைகள் 30.01.2024 தேதி வரை 642 முன்பதிவுகளும், வாடகை கார்கள் (Rental Cabs) 510 முன்பதிவுகளும், நிகழ்நிலை வண்டிகள் (Ola/Uber) மற்றும் முன்பணம் செலுத்தப்பட்ட ஆட்டோக்களுக்கு பிரத்யேக கார்கள் நிறுத்துமிடம் வழங்கப்பட்டுள்ளது. ஓட்டுநர்களுக்கு தேவையான குடிநீர், கழிவறை, மின்சாரத்துடன் கூடிய காத்திருப்பு கூடங்கள் போன்ற அனைத்து அடிப்படை வசதிகள் செய்யப்பட்டுள்ளது.

மேலும் கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்திற்கும் (KCBT) புறநகர் ரயில் நிலையமான ஊரப்பாக்கம் 1.5 கி.மீ தொலைவிலும், வண்டலூர் 2.1 கி.மீ தொலைவிலும் மற்றும் முனையத்தின் எதிரே புதிதாக அமையவுள்ள கிளாம்பாக்கம் ரயில் நிலையத்திற்கும் 500 மீ தொலைவில் தான் உள்ளது.

**நடைபெற்று வரும் கூடுதல் பணிகள் :-**

பொதுமக்களின் வசதியை மேம்படுத்தவும், போக்குவரத்து நெரிசலைக் குறைக்கவும் பின்வரும் திட்டங்கள் வகுக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. கிளாம்பாக்கத்தில் புதிய ரயில் நிலையம் அமைப்பதற்காக ரூ.20 கோடி ரயில்வே துறைக்கு பண பரிமாற்றம் செய்யப்பட்டுள்ளது. GST சாலையின் குறுக்கே KCBT மற்றும் கிளாம்பாக்கம் ரயில் நிலையத்தை இணைக்கும் நடை மேம்பாலம் (Sky Walk) - 31.01.2024 அன்று டெண்டர் கோரப்பட்டு பணிகள் தொடங்கப்பட்டுள்ளது. சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனத்தின் (CMRL) மூன்றாம் கட்டத்தின் ஒரு பகுதியாக கிளம்பாக்கத்தில் ஒரு புதிய மெட்ரோ ரயில் நிலையம் அமையவுள்ளது.

கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனைய பிரதான கட்டிடத்திற்கும் சென்னை மாநகர் போக்குவரத்து கழகப் பேருந்து (MTC) நிலையத்திற்கும் பயணிகள் வசதிக்காக இடையே சாய்வு தளம் மற்றும் படிகட்டுகள் அமைக்கும் பணி நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் பிப்ரவரி 2024-க்குள் முடிவடையும்.

வண்டலூர் மற்றும் அயனஞ்சேரி சந்திப்பு மேம்படுத்தும் பணிக்கு DPR தயாரிக்கப்பட்டு வருகிறது. நெடுஞ்சாலைத்துறையின் மூலம் மேற்கொள்ளப்பட்ட 3 சாலை விரிவாக்க பணிகள் முடிவடைந்துள்ளது. இப்பேருந்து முனையத்தில் புதிய காவல் நிலையம் - 05.02.2024 அன்று அடிக்கல் நாட்டப்படவுள்ளது. இம்முனையத்தின் முன் வெள்ளப்பெருக்கை தடுக்கும் வகையில் புதிய மழைநீர் வடிகால் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இப்பேருந்து முனையத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கான வசதிகளை மேம்படுத்த அணுகல் தன்மை தணிக்கை (Accessibility Audit) குழு அளித்த அறிக்கையின்படி பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

மேலும் கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்திலிருந்து 7 கி.மீ தொலைவில் உள்ள முடிச்சூரில் 5 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.27.98 கோடி மதிப்பீட்டில் 120 ஆம்னி பேருந்துகள் (Idle Parking for Omni Buses) நிறுத்துமிட வசதிகளை ஏற்படுத்த கட்டுமான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவ்விடத்தில் 300 பணியாளர்களுக்கான தங்குமிட வசதி, குடிநீர் வசதி, கழிப்பிட வசதி மற்றும் உணவகங்கள் போன்ற வசதிகள் ஏற்படுத்தப்பட்டு வருகிறது. இப்பணி மார்ச் 2024-க்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்தை மக்கள் முழுமையாக மகிழ்ச்சியோடு பயன்படுத்துகின்ற அளவிற்கு அனைத்து தேவையான கூடுதல் வசதிகளும் செய்யப்பட்டு வருகிறது.

**வெளியீடு : மக்கள் தொடர்பு அலுவலர், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்**